**சுருக்கம்**

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – பொறியியல் பிரிவில் பணிபுரியும் பணித்தொகையில் கூலிபெறும் பணியாளர்கள் ( Work charged ) – பேரூராட்சிகளில் பொறியியல் பிரிவில் – ஏற்னகவே அங்கீகரிக்கப்பட்டு காலியாக உள்ள பணி ஆய்வாளர் பணியிடங்களில் முறையாக பணி நியமனம் – விதித்தளர்வு செய்து அணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் ( பேரூ1) துறை

**அரசாணை ( நிலை ) எண். 183** **நாள்.19.09.2008**

படிக்கப்பட்டவை

1) அரசாணை ( நிலை) எண். 93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள். 25.05.98.
2) அரசாணை ( நிலை) எண்.126 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை நாள்.05.09.2007.
3) பேரூராட்சிகள் ஆணையர் சென்னை அவர்களின் கடித எண். 13988 / 2007 / அ 2 / நாள்.24.04.2008.

ஆணை :–

பேரூராட்சிகளின் ஆணையர் முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பேரூராட்சிகள் துறைக்கென தனியே பொறியியல் பிரிவு ஏற்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. என்றும் அதில் இதர பொறியியல் பணியிடங்களுடன் 250 பணி ஆய்வாளர் பணியிடங்களுடன் 250 பணி ஆய்வாளர் பணியிடங்களும் அடஙகும் என்றும் இரண்டாவதாகப்படிக்கப்பட்டஅரசாணையில் பேரூராட்சிகள் துறையில் பொறியியல் பிரிவில் மேற்படி 250 பணி ஆய்வாளர் பணியிடஙகள் உள்ளிட்ட பல்வேறு நிலையிலான பணியிடங்களும் புதுபித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் மேற்படி பணியிடஙகளில் தஙகளை பணியமர்த்தக்கோரி 1998 முதல் 10 ஆண்டுகாலமாக பணித்தொகையில் கூலிபெறும் பணியார்கள் ( Work Charged ) தொழில் நுட்ப உதவியாளர்கள் என்ற பெயரில் விண்ணப்பித்து வருகின்றனர் என்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

2. பேரூராட்சிகள் துறையில் பொறியியல் பிரிவில் தொழில் நுட்ப உதவியாளர் என்று அனுமதிக்கப்பட்ட பணியிடம் ஏதும் இல்லை. பொறியியல் துறையில் திட்டப்பணிகளை உரிய காலத்தில் நிறைவேற்றுவதற்காக சம்மந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர், உதவி / இளநிலை பொறியாளர்களால் அவ்வபோது சில பணியாளர்கள் உதவிக்கு அமர்த்திக்கொள்ளப்பட்டு உள்ளனர். இவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் வழியாக நியமனம் செய்யப்படவில்லை. இவர்களுக்கென முன்னுரிமைப் பட்டியல் எதுவும் பராமரிக்கப்படவில்லை. இவர்கள் தஙகளை பணி ஆய்வாளர் பணியிடத்தில் ஈர்த்து கொள்ளக்கோரி விண்ணப்பித்து வருகின்றார். இவர்களுக்கு ஊதியம் வழஙக வரவு செலவு திட்டத்திற்காக பணியமர்த்தப்பட்டார்களோ அந்த பணிக்கான மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்படும் 25 சதவீத சிறு மேற்பார்வை செலவினஙகள் ( Petty supervision charges ) தொகையிலிருந்து அவர்களுக்கு ஊதியம் வழஙகப்பட்டு வருகிறது. அவர்களின் கோரிக்கை தொடர்பாக அரசளவில் பல்வேறு கூட்டஙகள் நடத்தப்பெற்று

பரிசீலனையில் இருந்த நிலையில் அரசு கடித எண். 33670 / டி பி 2 ( 2 ) 98 – 23 நாள். 26.02.2003 ல் மேற்படி நபர்கள் பணித்தொகையிலிருந்து கூலி பெற அனுமதிக்கும்படி தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகையில் இருந்து கூலிபெற்று பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி நபர்கள் தங்களது பணியினை வரன்முறை செய்யக்கோரி பல்வேறு நிலைகளில் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்திலும் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்திலும் தொடர்ந்திருந்த வழங்குகளில் வழங்கிய தீர்ப்புகளின் அடிப்படையில் அவர்களின் கோரிக்கையினை பரிசீலனை செய்து பணி ஆய்வாளர், பணியிடங்கள் புத்தாக்கம் செய்து ஆணை வெளியிடப்படாததன் அடிப்படையில் பணி ஆய்வாளர் , பணியிடங்கள் இல்லை என்றும் வேலைவாய்ப்பகத்தின் மூலம் நியமனம் செய்யப்படாத நிலையில் அவர்களின் கோரிக்கை ஏற்பதற்கில்லை எனவும் 100 க்கும் மேற்பட்ட மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. என்றும் 5 நபர்களுக்கு மட்டும் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நுழைவு பணியிடங்களில் பணியமர்த்தி பேரூராட்சிகளின் இயக்கக செயல்முறைகள் ந.க.எண். 28789 / 2004 அ 2 / நாள். 16.03.2006 ன் படி ஆணையிடப்பட்டுள்ளது. என்றும், பேரூராட்சிகளின் ஆயைர் தெரிவித்துள்ளார். கடைசியாக அரசாணை (2டி) எண். 112, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் ( பேரூ1) துறை நாள்.29.06.2007 ல் 3 மனுதாரர்களுக்கு சென்னை உயர்நீதி மன்ற வழக்கின் அடிப்படையில் அவர்கள் கோரிக்கைஏற்பதற்கில்லை.என தெரிவிக்கப்பட்டதையும் பேரூராட்சிகளின் ஆணையர் சுட்டிக்காட்டியுள்ளார்.

3. மேற்படி பணியாளர்கள் நீண்ட காலமாக பேரூராட்சிகள் துறையில் பணி செய்து வருவதையும் அவர்கள், பெரும்பாலனவர்கள் அரசு பணியில் நியமனம் செய்வதற்கான அதிகபட்ச வயதினை கடந்துள்ளதையும் பொறியியல் பணியிடங்களில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதையும் நீண்ட காலமாக இவர்களின் கோரிக்கை தீர்க்கப்படாமல் உள்ளதையும் கருத்தில் கொண்டு அதனை தீர்க்குமுகமாவும் மனிதாபிமான அடிப்படையிலும் அவர்களின் கோரிக்கையினை பரிசீலனை செய்து சிறப்பு நேர்வாக அவர்களின் பணியினை ஒழுங்குபடுத்தலாம் என பேரூரட்சிகளின் ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. பேரூராட்சிகள் துறையில் பணிபுரிந்து வரும் பணித்தொகையில் கூலிபெறும் பணியாளர்கள் விபரஙகள் ஏதும் முழுமையாக பேரூராட்சிகளின் ஆணையரகத்தில் இல்லாததால் பேரூராட்சிகளில் பணிபுரியும் பணித்தொகையில் கூலிபெறும் பணியாளர்களில் தொடர்ந்து பணிபுரியும் பணியாளர்களை சரிபார்த்து அவர்களின் செயலாக்கத்தினை மதிப்பீடு செய்து பணி விவரஙகளை உரிய சான்றிட்டு அனுப்பி வைக்கும்படி அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் மேற்படி பட்டியல் சம்மந்தப்பட்ட மண்டல உதவி செயற்பொறியாளர் மற்றும் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களால் சான்றிடப்பட்டு மாவட்ட வாரியாக அவ்வாணையரகத்திற்கு வரப்பெற்று தொகுக்கப்பட்டுள்ளதாவும் பேரூராட்களின் ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. எனவே சிறப்பு நேர்வாக பேரூராட்சிகள் துறையில் 2001 ம் ஆண்டு வரை ( அதாவது பணியிடங்கள் நிரப்புவதற்கு அரசாணை (நிலை) எண்.211 பணியாளர் மற்றும் நிர்வாகச்சீர்த்திருத்தத்துறை நாள். 29.11.2001 ல் பொதுவான தடையாணை வெளியிடப்பட்ட நாள் வரை ) பணிபுரிந்து பணித்தொகையில் கூலிபெறும் ( ITI / DCE / DEE / DME / BE போன்ற ) தொழில்நுட்ப கல்வி தகுதி பெற்றுள்ள 185 பணியாளர்களையும் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பேரூராட்சிகளின் இயக்கக செயல்முறை ந.க.எண் 29789 / 2004 அ 2 நாள்.16.03.2006 ன் படி நுழைவுப்பணியிடத்தில் பணியமர்த்தப்பட்ட ஐந்து பணியாளர்களையும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்படாமைக்கு விதித்தளர்வும் வயது வரம்புவிதி தளர்வும் மேலும் இனசுழற்சி முறையே பின்பற்றாமைக்கு தளர்வும் அளித்து பணி ஆய்வாளர் பணியிடங்களில் ரூ.3050 – 75 – 3950 – 80 – 4590 என்ற ஊதிய விகிதத்தில் ஈர்த்து பணி

நியமனம் செய்து அவர்கள் தற்போது பணி செய்து வரும் மாவட்டத்திற்கே ஒதுக்கீடு செய்யலாம் என பேரூராட்சிகளின் ஆணையர் அரசே கேட்டுக்கொண்டுள்ளார்.

6. மேற்கண்ட பேரூராட்சிகளின் ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்தபின் இந்த 190 பணியாளர்கள் தொடர்பாக வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்படாமைக்கு விதி தளர்வு மற்றும் வயது வரம்பு விதி தளர்வு அளிக்கலாம் எனவும் ஆனால், இனசுழற்சி விதியை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க முடிவு செய்துள்ளது. அதற்கிணஙக ( ITI / DCE / DEE / DME / BE போன்ற ) தொழில்நுட்ப கல்வி தகுதி பெற்றுள்ள இந்த 190 பணியாளர்களையும் அரசு ஒப்பளிப்பு வழஙகப்பட்ட மொத்தம் 250 பணி ஆய்வாளர் பணியிடகளில், தற்போது காலியாக உள்ள பணியிடஙகளில் ரூ..3050 – 75 – 3950 – 80 – 4590 என்ற ஊதிய விகிதத்தில் முறையாக பணிநியமனம் செய்ய ஏதவாக இணைப்பு I மற்றும் II ல் கலம் 9 ல் குறிப்பிட்டுள்ளவாறு விதிகளை தளர்வு செய்தும் அவர்களை தற்போது பணி செய்து வரும் மாவட்டத்திற்கே ஒதுக்கீடு செய்யவும் அரசு ஆணையிடுகிறது.

7. இந்த பணியாளர்கள் தொடர்பான செலவினம் மாநில பகிர்வு நிதியிலிருந்து ஏற்கப்படவேண்டும். இந்த முறையான நியமனத்தில் சம்மந்தப்பட்ட பேரூராட்சிகளின் பணியாளர் வகையிலான மொத்தச்செலவினம் வருவாயில் 49 % க்கு மிகாமல் இருப்பதை உறுதிசெய்து கொள்ளுமாறு பேரூராட்சிகளின் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இந்த பணியாளர்களின் முதுநிலை மாநில அலகில் ( State unit ) நிர்ணயிக்கப்படல் வேண்டும். என்றும் அரசு ஆணையிடுகிறது. பணி விதிகளில் தக்கவாறு நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து
அரசு முதன்மைச்செயலாளர்

பெறுநர்
பேரூராட்சிகளின் ஆணையர் , குறளகம், சென்னை – 108.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்
இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை – 108
நகல் : நிதித்துறை , சென்னை – 9
நகல் : தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை – 9
நகல் : நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை ( அந1) துறை, சென்னை –9
நகல் : மாண்புமிகு முதலமைச்சரின் தனிச்செயலர், சென்னை – 9
நகல் : மாண்புமிகு அமைச்சர் ( ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி )
அவர்களின் நேர்முக உதவியாளர் சென்னை – 9
நகல் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர் சென்னை – 9
நகல் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்